ஏற்படுத்தியிருப்பதன் காரணமாக நெல்லை மாவட்டத்தில் தூத்துக் குடியில் உள்ள "ஃபிஷர்மென் ஃபெடரேஷன்" போன்ற மீனவர்கள் சங்கங்களிலிருந்து அதை ஆட்சேபித்து அரசாங்கத்திற்கு அனுப் பப்பட்டுள்ள ஆட்சேபணைகள் மீது அரசாங்கம் ஏதாவது நடவடிக் கைகளை எடுத்துள்ளதா? இல்லையெனில் இனிமேலாவது அதன்மீது நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அந்தக் காலத்தில் அவர்கள் அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அதில் ஒரு சிறிய மாற்றத்தை இப்போது செய்திருக்கிறோம். ஏற்கெனவே ட்ரெயினிங் ஆனவர்கள், டரெயினிங் ஆகாதவர்கள், எந்தெந்தப் பகுதிகளில் கேட்டிருக்கிறார்கள், 'கவேர்ட் ஏரியாவா' 'அன் கவேர்ட் ஏரியாவா', யார் எவ்வளவு காலத்திற்கு முன்னதாக விண்ணப்பித்திருக்கிறார்கள் போன்ற இவைகளை எல்லாம் அடிப் படையாக வைத்து இந்த அடிப்படையில் அரசு சில மீனவர்களைத் தேர்ந்தெடுத்து படகுகள் கொடுக்க தகுதி படைத்தவர்கள் யார் என்று பார்த்து கொடுத்து வந்தது. அதுகுறித்து குறைகள் சொல்லிவந்ததால் விண்ணப்பங்களை பொறுக்கியெடுத்து 'கவேர்ட், அன்கவேர்ட், ட்ரெயின்ட், அன்ட்ரெயின்ட்' என்று விண்ணப்பங் களை பொறுக்கி சீட்டு குலுக்கிப் போட்டு யார் யார் என் வரு கிறதோ அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று செய்யப்பட் டிருக்கிறது. இதனால் விருப்பு வெறுப்பு இருக்கிறது, கொடுத்தார் கள் கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் வருவதைத் தவிர்க் கலாம். இப்படி குலுக்கி எடுப்பதன் மூலம் இப்போது கொடுக்கப் படுகிறது. அதில் எந்தவிதமான ஆட்சேபணையோ, தகராறோ, குழப்பமோ இல்லை. அது மிக அமைதியாக நடைபெறுகிறது.

சென்னை மாநகருக்கு பால் விநியோகம்

*** 42 வினா—திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1967-68-ம் ஆண்டில் திருச்சி, ஸ்ரீரங்கம் பால் வழங்கு நிர்வாகத் தினர் மூலம் சென்னைக்கு எத்தனை லிட்டர் பால் அனுப்பப்பட்டது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 6,71,672 லிட்டர்கள்.

திரு. வை. சுவாமிநாதன் : திருச்சி மாவட்டத்தில் இப்போது அங்குள்ளவர்களுக்கே பால் கிடைப்பது மிகக் கஷ்டமாக இருக் கிறது. குறிப்பாக அங்கு பாய்லர் தொழிற்சாலை, சிறு ரக ஆயுதத் தொழிற்சாலை போன்றவைகள் வந்திருப்பதன் காரணமாக அங்குள்ளவர்களுக்கே பால் கிடைக்காத நிலை இருப்பதன் காரண மாக திருச்சியிலிருந்து சென்னைக்கு பால் சப்ளை செய்வதை அரசாங்கம் உடனடியாக நிறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: திருச்சிக்கு போதுமானது செலவழித்தது போக மிஞ்சியதைத்தான், மிச்சத்தைத்தான் சென்னைக்கு அனுப்புகிறார்கள்.

1970 ஆகஸ்ட் 26]

திரு. ஆர். நாகசுந்தரம் : திருச்சி, ஸ்ரீரங்கம் பால் வழங்கு சங்கத்திலுள்ள உறுப்பினர்களுக்கு மாடுகள் வாங்குவதற்காக பண உதவி செய்கிறார்கள். ஆனால் அந்த மாடுகள்மூலம் வரும் பாலை உள்ளூரிலேயே அதிக விலைக்கு அவர்கள் விற்று விடுகிறார்கள். ஆகவே பால் வழங்கு கழகத்திற்கு போதுமான பால் வருவதில்லை. ஆகவே அந்த சொசைட்டி மூலம் உதவி பெறும் உறுப்பினர்கள் சொசைட்டிக்கே அந்தப் பாலைத் தருவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : புகார் இது. இதுபற்றி அரசாங்கத்தினிடம் தெரிவித்தால் விசாரிக்கப்படும்.

திரு. கே. விநாயகம்: திருச்சியிலும், ஸ்ரீரங்கத்திலும், என் கோயம்புத்தூரிலிருந்தும் கூட இவ்வளவு இடங்களிலிருந்தும் சென்னைக்கு பால் வந்து கூட இங்கே கொடுக்கக் கூடிய பாலின் விலையை அதிகமாக ஏற்றி அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பால் விலை ஏறியது என்று— ஏற்றியிருக்கிறோம் என்று சொன்னார்கள். ஏற்றியிருக்கிறோம் என்று சொல்வது சரியல்ல. 'ஸ்டான்டேர்டைஸ்ட் மில்க்' என்ற புதுவிதமான பால் இப்போதுதான் இந்தியா முழுவதும் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது. இந்த 'ஸ்டான்டேர்டைஸ்ட் மில்க்' க்கு பம்பாயில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விலை ஒரு லிட்டருக்கு ரூ 1.40 ஆகும். ஆனால் அதற்கு சென்னையில் நிர்ணயிக்கப்பட் டிருக்கிற விலை ரூ. 1.30 ஆகும். 'ஸ்டான்டேர்டைஸ்ட் மில்க்' என்று ஏற்கனவே கொடுத்திருந்து அதன் விலையை இப்போது உயர்த்தியிருக்கிறோம் என்று யாரும் கருத வேண்டியதில்லை. அந்த 'ஸ்டான்டேர்டைஸ்ட் மில்க்' என்பதை இப்போதுதான் நாம் கொடுக்கிறோம். அதன் விலையை இப்போதுதான் நாம் நிர்ண யித்திருக்கிறோம். "ஆப்பரேஷன் ஃப்ளட்" என்ற ஸ்தாபனத்தின் 11 கோடி ரூபாய் திட்டத்தின் கீழ் இது புதிதாகப் புகுத்தப்பட்டி ருக்கிறது. பம்பாயில் அதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள விலை ரூ. 1.40 இங்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விலை ரூ. 1.30.

திரு. கே. பி. எஸ். மணி : திருச்சி, தஞ்சை மாவட்டங்களிலி ருந்து சென்னைக்கு பால் வருவது குறைந்திருக்கிறது. காரணம் அங்குள்ள சொசைட்டிகளுக்கு கொடுக்கக்கூடிய விலை மிகக் குறைவு. அங்கிருந்து 75 காசுக்கு வாங்கி இங்கு 1.50-க்கு கொடுக் கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அவைகளை கவரக் கூடிய விதத்தில் அந்த சொசைட்டிகளிலிருந்து வாங்கும் பாலுக்கு 90 பைசாவாவது கொடுக்க உத்தரவிடப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிக் கேள்வி வேண்டும்.